# அபிராமி அந்தாதி ஆய்வுரை

## ஐந்தாவது செய்யுள்



# 5

இப்பாடலைப் பாராயணம் செய்பவருக்கு
அம்பிகை தரிசனம்
கிடைக்கும்.

வெளியீடு :

வழக்கம்பரை சன சமூக நிலையம்

சுழிபுரம்.

1983

# ஐந்தாவது பாடலில் நாம் அஞ்சினோம்

புலவர் சந்தானராமன் தொடர்ந்து எழுதும் ஐந்தாவது பாடல் ஆய்வுரை இரண்டு ஞானசம்பந்தன் இதழ்களில் வெளியாகியதை நாம் கண்டுகொண்டோம். நீண்ட உரையை அச்சிட அதிகபக்கம் எடுக்கும், இதனால் அதிக பணம் தேவைப்படும் என நாம் அஞ்சினோம். மனம் பெரும் சஞ்சலம் அடைந்து கொண்டிருந்தது.

இவ்வேளையில் முதலாவது காப்புச் செய்யுளை அச்சிட்டு வெளியிட உதவிய அன்பர் ஜெர்மனியில் வாழும் ஆ. கணேசலிங்கம் எழுதிய கடிதம் ஒன்று எமது கைக்குக் கிடைத்தது. கடிதத்தில் நான் ஒரு அன்பரை அபிராமியந்தாதிச் செய்யுள் ஒன்றை அச்சிடும் செலவை வழங்குமாறு வேண்டியுள்ளதாகவும் நீங்கள் அன்பருக்கு கடிதம் எழுதுங்கள் என்று குறிப்பிட்டதுடன் தமது அன்பளிப்பாக சிறுதொகைப் பணத்தையும் அனுப்பியிருந்தார்.

ஐந்தாவது பாடலின் பயன் அம்பிகை கனவில் காட்சியளித்தல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அன்பர் ஆ. கணேசலிங்கம் (மணிக்கு) செய்த பணிக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழும் அன்பர் மனதில் அம்பிகை காட்சி கொடுத்து எமக்கு உதவுமாறு வேண்டியதாக நாம் எண்ணுகின்றோம்,

சங்கானை மட்பாண்ட கூட்டுறவுச் சங்கத்தில் மனேச்சராகப் பணிபுரியும் அன்பர் த. கைலாசபிள்ளை எங்கள் வெளியீடுகளைத் தமது அன்பர்களு வழங்கிச் சிறு தொகைப் பணத்தைத்திரட்டி வழங்கியுள்ளார். இதே போல் நல்லூர் பெண்கள் இந்துப் தமிழ் பாடசாலை அதிபர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குருவும் இன்னும் சிலர் சிறு சிறு உதவிகளைச் செய்துள்ளார்கள்.

அன்பர்கள் யாவரும் வழங்கிய உதவிகளைக் கொண்டு ஐந்தாவது செய்யுளை அச்சிட்டு வெளியிட முன்வந்துள்ளோம். அன்பர்கள் வழங்கும் உதவிகள் தான் பிரதியொன்றை ரூபா ஒன்றுக்கு வழங்க உதவுகின்றது. உதவிய யாவருக்கும் இந்நூல் மூலமாக அன்னையின் தரிசனம் கிடைக்க வழக்கம்பரைத் தாயை வேண்டுகின்றோம்.

— க. வாமதேவன்

# அபிராமி அந்தாதி

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே. (5)

அ. பொருந்தியமுப்புரை

(1) அம்பிகைக்குத் திரிபுரை என்றும், திரிபுரசுந்தரி என்றும் பெயர்கள் உண்டு. மூவுலங்களிலும் மிகச் சிறந்த பேரழகி ஆதலால் திரிபுரசுந்தரி எனப்பட்டாள். மூன்று மூன்றுகவுள்ள அனைத்திலும் பொருந்தியிருப்பதால் திரி புரை அல்லது முப்புரை எனப் பெயர் பெற்றாள். திரி புராந்தகனின் மனைவியாதலாலும் அவ்வாறு அழைக்கப் படுகிறாள். அவள் பொருந்தியுரையும் முப்புரங்களை — திரி யங்களை விரிவாகக் காண்போம்.

(2) அனைத்தினுக்கும் மூலகாரணமாகிய பிரணவத்தி திலுள்ள 'அட்சரத்திரயம்' என்னும் அ, உ, ம ஆகிய மூன்று எழுத்துக்களின் உட்பொருளாய்ப் பொருந்துவ தால் பொருந்திய முப்புரை என்றார்.

(3) முதல் மூன்று வேதங்களும் 'த்ரயி' என அழைக் கப்படும். மூவேதங்களின் உட்பொருளாய், பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேருமாய்ப் பொருந்தி விளங்குவதால் 'முப்புரை' ஆனாள்.

'ருக்' வேதம் ''அக்னிமீடே ..''என்று அகரத்தில் துவங்குகிறது.

'யஜுர்' வேதம் "இஷேத்வா..." என்று இகரத்தில் துவங்குகிறது.

'சாம' வேதம் "அக்ன ஆயாஹி..." என்று அகரத்தில் துவங்குகிறது.

அ, இ, அ ஆகிய இம் மூன்று துவக்க எழுத்துக்களும் இணைந்து, "ஐம்" என்னும் "வாக்பவபீஜம்" தோன்றுகிறது என்று பிரபல உரை ஆசிரியரும் தேவி உபாஸகருமான திரு. அண்ணா. என். சுப்பிரமணிய அய்யர் விளக்குகிறார். மூன்று வேதங்களில் பொருந்தியவள் என்பதை லலிதா ஸஹஸ்ரநாமம் 'த்ரயை' எனக்குறிப்பிடுகிறது.

(4) ஒரு சீடனின் நேர்குரு 'ஸ்வகுரு' என்றும், அவரதுகுரு அல்லது குருவின்குரு 'பரமகுரு' என்றும், அவரதுகுரு 'பரமேஷ்டி குரு' என்றும் அழைக்கப்படுகின்றனர். இம்மூன்று குருவினிடத்தும் பொருந்தி அருள் பாலிப்பதால் அம்பிகை முப்புரை ஆனாள்.

(4—A) அல்லது, நமது பெற்றோர் ஜன்மகுரு' என்றும், பாடங்கற்பிக்கும் ஆசிரியர் 'வித்யாகுரு' என்றும், மந்திர உபதேசம் செய்யும் ஞானாசிரியர் 'தீட்சாகுரு' என்றும் பெயர்பெறுவர். இம்மூன்று குருவினிடத்திலும் பொருந்தி அருள்பாலிப்பதால் 'முப்புரை ஆனாள்.

(5) வழிபாட்டுக்குரிய 'முத்தீ' எனப்படும் 'தட்சிணாக்னி' 'கார்கபத்யம்' 'ஆகவனீயம்' ஆகிய மூன்று அக்னிகளிலும் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(6) மூவுடல்களாகிய ஸ்தூலசரீரம், சூட்சுமசரீரம், காரண சரீரம் ஆகியவற்றில் பொருந்திநிற்பதால் 'பொருந்திய முப்புரை' என்றார்.

(6—A) 3 முதல் 6 வரையுள்ள தலைப்புக்களில் கண்ட கருத்துக்கள் லலிதாசகஸ்ரநாம பாஷ்யத்தின் தொடக்

கத்திலுள்ள பாஸ்கரராயரைப் பற்றிய குறிப்பில் காணப்படுகிறது.

"பாசுராநந்தநாதர் என்ற பாஸ்கரராயர் தட்சிணாக்னி – ஆகவனீயம் என்னும் அக்னிகளிலும், ஸ்தூல-சூட்சும காரண சரீரங்களிலும், ருக் – யஜுர் – சாமம் என்னும் வேதங்களிலும் உறைபவளாகிய, மூன்று குருக்களின் ஸ்வரூபிணியான திரிபுரசுந்தரியை ஆராதிப்பவர்" என்பதே அக்குறிப்பு.

(7) குண்டலினியோகத்தில் கூறப்படும் இடை, பிங்கலை, சுழுமுனை ஆகிய நாடிகளில் பொருந்துவதால் முப்புரை ஆனாள்,

(8) மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களும் மூன்று பகுதிகளாக அல்லது கண்டங்களாகப் பிரிக்கப்படும். அக்னிகண்டம், சூர்யகண்டம், சோமகண்டம் என்னும் மூன்று கண்டங்களில் பொருந்துபவள் முப்புரை ஆனாள் இதனை லலிதா சகஸ்ரநாமம் 'திரிகண்டா' என்ற நாமாவில் குறிப்பிடுகிறது.

(9) குண்டலினிசக்தி மேலெழும்பும் வழியிலுள்ள பிரம்மக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, ருத்திரக்கிரந்தி ஆகிய மூன்று முடிச்சுக்களைப் பொருந்தி பேதித்துக் கடந்துவருவதால் 'முப்புரை' ஆனாள்.

"பிரம்மக் ரந்தி விபேதினீ
விஷ்ணுக் ரந்தி விபேதினி"
ருத்ரக் ரந்தி விபேதினி"

ஆகிய நாமாக்கள் இதனைக் குறிப்பிடும்.

(10) 'திரிகோணகா' என்றபடி முக்கோணங்களில் ஆவாகனம் செய்து வழிபடப்படுவதால் அல்லது முக் அல்லது முக்கோணங்களில் உறைதலால் திரிபுரை – முப்புரை ஆனாள்.

*(11)* ஸ்ரீவித்தையில் கூறப்படும் வாக்பவகூடம், சக்தி கூடம், காமகிரிகூடம் ஆகிய கூடங்களில் பொருந்துவ தால் 'முப்புரை ஆனாள் ''திரிகூடாத்மிகா'' என்று லலி தாசகஸ்ரநாமம் கூறும்.

*(11-A)* மற்றும் ஸ்ரீசக்ரத்தின் மத்யகோணத்தின் மூன்று மூலைகள், மேற்படி பீடதேவைகள், கோணத் திரயம், ரேகாத்திரயம், பூபுரத்திரயம் ஆகியவற்றி லெல்லாம் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(12) கீழ் - மேல் — நடு உலகங்கள் அனைத்திலும் உறை பவள் 'முப்புரை' எனப்பட்டாள்.

*(13)* மும்மூர்த்திகளிடத்தும் அவ்வவர் உலகிடைப் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(13-A) அவர்களின் சக்திகளாகவும் பார்வதி – லட்சுமி --சரஸ்வதி என விளங்குவதால் முப்புரை ஆனாள்.

(14) படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று செயல்களிலும் அவளே ஆதிக்கம் செலுத்துவதால் முப் புரை ஆனாள். அபிராமி அந்தாதியிலும் 'பூத்தவளே'' என்ற பாடலில் இதனைக் குறிப்பிடுகிறார். அவளது பாத தூளியின் துணைகொண்டே மும்மூர்த்திகளும் முத்தொழில் களைப் புரிகின்றனர் என்று செளந்தரியலகரி விளக்குகிறது.

(15) இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய மூன்று சக்திகளாகவும் இருப்பதால் முப்புரை ஆனாள்.

*(16)* ஜாக்ர, ஸ்வப்ன, சுழுப்தி என்னும் மூன்று அவஸ்தைகள் அல்லது நிலைகளுக்கு அவளே காரணமாய்ப் பொருந்துகிறாள். 'திரிபுராம்பிகா'என்கிறது சகஸ்ரநாமம் 8 வது ஆவரணத்திற்கும் சரீரங்களுக்கும் அவஸ்தைகளுக் கும் திரிபுராம்பிகாவே அதிதேவதை.

*(17)* சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என் னும் மூன்று குணங்களையும் தானே தந்து பொருந்துவ தால் முப்புரை ஆனாள். இதனை 'திரிகுணா' என்கிறது சகஸ்ரநாமம்.

(18) முச்சுடர்கள் எனப்படும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவற்றில் பொருந்துவதால் முப்புரை ஆனுள்.

(19) 'திரிவர்க்க நிலேயா' என்ற சகஸ்ரநாமப்படி மூப்பாலென்னும் அறம், பொருள், இன்பத்தில் நிலேபெறுவதால் முப்புரை ஆனுள்.

(20) 'கடவுளுக்கு மூன்று நிலேகள் உண்டு. பொன்னும் அணிகலனும் போன்ற அபேதநிலே குடமும்நீரும் போன்ற பேதநிலே, மலரும் மணமும் போன்ற பேதாபேதநிலே ஆகிய மூன்று நிலேகளிலும் அம்பிகை இருப்பதால் முப்புரையானுள். இந்நிலேகளில் அம்பிகையின் வியாபகத்தை "ஒன்ருய் அரும்பி " என்ற பாட்டில் அபிராமி பட்டரும் குறிப்பிடுகிருர்.

(21) அறிவு, அறிபவள், அறியப்படுபொருள் ஆகிய ஞாதா, ஞானம், ஞேயம் என்பனவாக இருப்பதால் முப்புரை ஆனுள்.

(22) தாபத்திரயங்கள் என்னும் ஆணவம், கன்மம், மாலய ஆகிய மும்மலங்களுக்குக் காரணமாகித்தானே அவற்றை நீக்கவும் உதவுவதால் 'முப்புரை ஆனுள்.

(23) யக்ஞப்பிரியா, யக்ஞகர்த்தி யஜமானஸ்வரூபிணி என்ற நாமாக்களில் கூறியபடி வேள்வியினே ஆற்றுபவள். வேள்விக்குரியவள் ஆகிய மூன்று நிலேகளிலும் பொருந்துவதால் முப்புரை ஆனுள்.

(24) மணி, மந்திர, ஔடதம் என்னும் மூன்று உபாயங்களாகவும் இருப்பவள் அவளே, மணியே! எனவும், பிணிக்கு 'மருந்தே!' எனவும், அந்தாதியே கூறும். 'சர்வ மந்திரஸ்வரூபிணி' என சகஸ்ர நாமம் கூறும்.

(25) நேற்று, இன்று நாளே என எக்காலத்தும் தானே நிலேயாய் நின்று நிலவுவதால் முப்புரை ஆனுள். முக்காலத்திலும் காலத்தின் தத்துவமாய் அவளே இருப்பதால் காளிகா அல்லது காளி எனப்படுகிருள்.

(26) காலைசந்தி மாலைசந்தி, மாத்யான்னியகம் என்ற வேளைகளில் செய்யும் சந்தியாவந்தன வழிபாட்டில் அவளே வந்து காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி எனப் பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(27) துருவாசர் இயற்றிய லலிதாஸ்தவ ரத்தினம் என்னும் ஸ்ரீநகர விமரிசனத்தில் "மஹாமேருவின் கிழக்கு தென்மேற்கு, வடமேற்கு திக்குகளின் கோடியில் இருக்கும், பிரம்ம விஷ்ணு ருத்ரலோகங்களுக்கு ஆதாரமான மூன்று தாழ்வரைகளையும் வணங்குகிறேன்" என்று கூறுகிறார். ஆகவே அந்த முப்புரத்தில் அம்பிகை சான்னித்யம் கொள்வதாலும் முப்புரை ஆனாள்.

(28) மற்றும் ஸ்ரீவித்தையில் குறிப்பிடப்படும் ஜாலந்திரபீடம். காமகிரிபீடம், ஒட்யாணபீடம் ஆகியமூன்று பீடங்களில் எழுந்தருளுவதால் முப்புரை ஆனாள்.

(29) அம்பிகை வழிபாட்டில் மூன்று முக்கிய அங்கங்கள் உண்டு. குருநாதர் – உபஸாகர் – தேவி ஆகியவையே இருக்கிறாள். அதனால் அவள் பொருந்திய முப்புரை ஆனாள்.

(30) ஸ்ரீ வித்தையில் மூன்று குருமண்டலங்கள் குறிக்கப் படும். அவை திவ்யௌக குருமண்டலம், ஸித்தௌக குரு மண்டலம். மானௌக குருமண்டலம் என்பன. அக்குரு மண்டலங்களிலும் குருவின் ரூபமாக அம்பிகையே பொருந்துவதால் முப்புரை ஆனாள்.

(31) ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்னும் மூன்றுவகைத் துன்பங்கள் நமக்கு ஏற்படும். அவற்றைக் கொடுப்பவளும் அவளே, "ஆக்கம் தானு வாள், அழிவு நிலையாவாள் ....நோவுங் கொலையுங் நுவலொணுப் பீடைகளும், சாவும் சலிப்புமென தான் பல கணமுடையாள் என்பார் பாரதியாரும், மூவகை இடங்களுக்கும் காரணமாய்ப் பொருந்துவதால் 'முப்புரை' ஆனாள்.

(32) மனம். வாக்கு, காயம் என்னும் மூன்றிலும் பொருந்துவதாலும் மற்றும் மனம், புத்தி, சித்தம் ஆகியவற்றில் பொருந்துவதாலும் முப்புரை ஆனாள்.

(33) மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அவளது சாந்நித்தியத்தாலேயே சிறப்புப் பெறுவதால் பொருந்திய முப்புரை ஆனாள்.

(34) பக்தி, ஞானம், கர்மம் ஆகிய மூன்று மார்க்கங்களிலும் அவளே பொருந்துவதால் 'முப்புரை' ஆனாள்.

(35) அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய மூன்று சித்தாந்தங்களிலும் அம்பிகைக்கு இடமுண்டு. அதனாலும் 'முப்புரை' ஆனாள்.

(36) ஸ்ரீவித்தையில் கூறிப்பிடப்படும் காதிவித்தை — ஹாத்வித்தை — ஸாதிவித்தை ஆகிய மூன்றிலும் பொருந்துவதால் 'முப்புரை , ஆனாள்.

(37) முக்கோணங்களின் பக்கங்கள் மந்திரம், தந்திரம், யந்திரம் ஆகியவைகளைக் குறிக்கும். அவற்றில் பொருந்துவதால் 'முப்புரை' எனப்பட்டாள்.

(38) ஸ்ரீவித்யாசாஸ்திரம் மூன்று உட்பிரிவுகளை உடையது. ஆனந்தபைரவமதம் என்றும். ஹயக்ரீவமதம் என்றும். தக்ஷிணா மூர்த்திமதம் என்றும் அவை பெயர்பெறும்' அம்மூன்று மதங்களிலும் பொருந்துவதால் 'முப்புரை. ஆனாள்.

(39) ஸ்ரீசக்ரத்திலும் மூன்று பிரிவுகள் உண்டு. சம்ஹாரசக்ரம், ஸ்திதிசக்ரம், சிருஷ்டிசக்ரம் என்பவை அவை. அவற்றில் பொருந்துவதால் 'முப்புரை' ஆனாள்

(40) பரமாத்மதத்துவம், ஈச்வரன் - ஜீவன் — பிரமாண்டம் என மூன்றாக விரிகிறது. அம்மூன்றாகவும் அம்பிகையே பொருந்துவதால் 'முப்புரை' எனப்பட்டாள்.

(41) த்ரைலோக்யமோஹனம் முதலான ஒன்பது ஆவரணங்களிலும் முறையே திரிபுரா, திரிபுரேசி திரிபுரசுந்தரி, திரிபுராவாசினி திரிபுராஸ்ரீ, திரிபுராமாலினி, திரிபுராஸித்தா, திரிபுராம்பிகா, மஹாதிரிபுரசுந்தரி ஆகிய தேவதைகளின் உருவில் அம்பிகையே எழுந்தருளுவதால் பொருந்திய முப்புரை என்றார். இங்கு மூன்றாவது ஆவரணத்தில் இருப்பவள் பெயர் 'திரிபுரசுந்தரி' என்பதும் குறிப்பிடத்தக்கது.

(42) சௌந்தரிய லகரி உரையில் பிரும்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'புரம்' என்று பீஜாட்சரத்துக்கு பெயர் உண்டு என்கிறார். ''பராம்பிகையின் மூல மந்திரவர்ணங்களே 'திரிபுர' மென்று சொல்லப்படும். அந்த மூன்று பீஜாட்சரங்களாகியபாலினை, சிவபெருமான் தன் மனது என்னும்மத்தினால் கடைந்தார். அதிலிருந்து நவநீதம் (வெண்ணெய்) போல ஜகதீஸ்வரியின் ஸ்வரூபம் ஆவிர்பவித்தது. அக்காரணத்தால் பரமசிவனுக்குத் திரிபுரமதனன் (முப்புரங்களைக் கடைந்தவன்) என்னும் பெயர் உண்டாயிற்று'' எனவும் அவர் விளக்குகிறார். தனது மூன்று பீஜாட்சரங்களாகிய புரத்துக்கு உரியவள் ஆதலின் 'முப்புரை' ஆனாள்.

(43) சத் – சித் – ஆனந்தரூபமாய் ஸ – உமா ஸ்கந்தனாக சோமாஸ்கந்தமூர்த்தியாய் விளங்கி அருள் பாலிக்கும் அம்பிகையினை லலிதா சகஸ்ரநாமம் 'சச்சிதானந்தரூபிணி' என்று போற்றுகிறது.

நாற்பத்துமுக்கோண நடுவில் வாழும் அவளது திருவடியில் இந்த நாற்பத்துமூன்று விளக்கங்களையும் சமர்ப்பித்து எங்கும் சச்சிதானந்தம் நிலைக்க முப்புரையினைப் பிரார்த்திக்கிறேன்.

## (ஆ) செப்புரை செய்யும் புணர்முலையால் வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி

(1) செப்புக்கலசம்போன்ற தனபாரத்தினால் வருந்திய கொடி போன்ற இடையினையுடைய மனோன்மணி என்னும் பெயருடையவள் என்பது பொதுவான பொருள்.

(2) அம்பிகையின் திருமுலைகள் இரண்டு 'பரஞானம்' 'அபரஞானம்' என்னும் இருவகை ஞானங்களாகும். தூயவுடம்பினனாதல் என்பது இறைவனின் எண்குணங்களில் ஒன்று. ஆதலால் அம்பிகையின் சரீரமும் நம்முடையது போன்ற மாமிசசம்பந்தமான ஊனுடல் அன்று என்பதனையும் 'திவ்யமங்கள சரீரம்' எனும் தூய அழகுடல்

என்பதனையும் நாம் அறிதல் அவசியம். மற்றும் அம்பிகையின் திருமேனி குறித்த வருணனைகள் வருமிடங்களிலெல்லாம் இக்கருத்தை நினைவில் கொள்ளவேண்டும்.

(3) பரஞானம், அபரஞானம் இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாதலின் இடைவெளியின்றி நெருங்கிய 'புணர்முலை' என்றார்.

(4) பொன்னை உருக்கி அணியாக்கச் செம்புகலக்க வேண்டும். அதுபோல் பொன்னைநிகர்த்த புண்ணியர்களும் அம்பிகை அருளும் ''ஞானசம்பந்த''த்தால் மேல்நிலை எய்துகின்றனர். செப்புக்கலசம் உருவத்தால் மட்டுமின்றி உட்கருத்தாலும் இங்ஙனம் உவமையாயிற்று.

(5) செப்புக்கலசம் கோபுரத்தின் உச்சியில் இடம் பெறும். அவ்வாறே புணர்முலைகளாகிய ஞானங்களும் மேல்நிலை பெறும். செப்புக்கலசம் புனிதமான பொருளாகும். புணர்முலையும் புனிதமாய் எண்ணத்தக்கது.

(6) ''கரிகலபகும்பஸ்தனந்தா பரிக்ஷீண மத்யே'' என்கிறது சௌந்தரியலகரி அதாவது ''யானையின் மத்தகம் போன்ற தனபாரத்தினால் சற்றே சாய்ந்த மெல்லிடையுடையவள்'' என வருணிக்கிறது.

(6·A) 'தனுமத்யா' (குறுகிய இடையாள்) என லலிதாசகஸ்ர நாமமும், ''ஸ்தனபரநமிதா'' (ஸ்தனபாரத்தினால் வளைந்தவள்) என்று ஸ்ரீ சூக்தமும் அம்பிகையினை வருணிக்கின்றன.

(7) 'மனோன்மணி' என்பது அம்பிகையின் ஆயிரம் பெயர்களுள் ஒன்று. 'உன்முகம்' என்றால் மேல்நோக்கியது என்பது பொருள். மனத்தினை மேல்நிலைக்கு அல்லது மேல்நோக்கி எழுப்புபவள் ஆதலால் மனோன்மணியானாள். மனோன்மணி சக்தியின் இருப்பிடம் புருவமத்திக்குமேல் என்பர்.

(8) வாமதேவாயநம ... மனோன்மனாயநம: என்று சிவபெருமான் போற்றி வணங்கப்படுகிறான். மனோன்மனன் ஆக அதாவது மனதுக்குள் மனனாக அல்லது மனதுக்கு

உகந்தவளாக இனியவளாக இருக்கிறாள் மனோன்மனனின் சக்தியாதலால் அம்பிகையும் மனோன்மணியாவாள் அல்லது அவளே மனத்துக்குள் மனமாக — மனத்துக்கு உகந்தவளாக இருப்பதாலும் மனோன்மணியாவாள்.

(9) ''மனச்ச — சங்கல்ப — விகல்ப — சூன்யம் மனோன்மணி'' என்று உரையாசிரியர் அண்ணா சுப்பிரமணிய அய்யர் எடுத்துக் காட்டுவதுபோல் மனத்தின் சலனமற்ற — அசைவற்றநிலை மனோன்மணி நிலையாகும். அதாவது மன அமைதியினை அளிப்பவள் மனோன்மணி எனலாம்.

## இ. வார் சடையோன் அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை

(1) நீண்ட சடையுடைய சிவபெருமான் உட்கொண்ட ஆலகாலத்தை அமுதாக மாற்றியவள் அம்பிகையாவர்கள். அவளது கரம் பட்டவுடன் அனைத்தும் நல்லனவைகளாகவே ஆகும் என்பது கருத்து.

(2) மூலாதாரத்தில் நஞ்சாக இருக்கும் சக்தி குண்டலியோகப் பயிற்சியின்மூலம் ''சகஸ்ராரத்தில்'' அமுதரஸமாகிறது என அபிராமி அந்தாதிக்கு சாக்தரீதியாக உரையெழுதிய திண்டுக்கல் திரு. சண்முகநாதன் அவர்கள் விளக்குவார்.

(3) நஞ்சுண்டநாதனைக்குறித்த கவலையன்றியும், அவனது சரீரத்துக்குள் உறையும் அனைத்துயிரையும் காக்கும் கருணையுடன் நஞ்சினை அமுதாக்கினாள்.

(4) நஞ்சு அமுதாதலும், நன்மை தீமையாதலும். வறியவர் செல்வர் ஆதலும் மூடன் அறிஞனாதலும் ஆகிய மாற்றங்கள் எல்லாம் அன்னையின் ஆடல்கள் ஆகும்.

## ஈ. அம்புயமேல் திருந்திய சுந்தரி

(1) ''தாமரைமலரில் எழுந்தருளிய அழகி'' என்றார் கலைமகளும், திருமகளும் முறையே வெண்தாமரை, செந்தாமரை மலர்மேல் வீற்றிருப்பதனை அறிவோம். அம்பிகை எழுதருளும் தாமரை மூலாதாரக் கமலம் முதல் சகஸ்ராரம் ஈறாகவுள்ள தாமரைகளாகும்.

(2) சித்தத்தை ஒருமைப்படுத்தியயோகிகளுக்கு தாமரைகளின் மிசை அம்பிகை மிகவும் அழகான - நேர்த்தியான - கம்பீரமான - கருணைநிறைந்த தோற்றத்தைக் காட்டியருளுவதால் 'அம்புயமேல் திருந்திய சுந்தரி' என்றார். சிறிதும் குறையில்லாத—அழகிலக்கணம் குன்றாத (Spotless and Perfect beauty) எழிலுடையவள் என்பதனையே "திருந்திய சுந்தரி" என்ற அடைமொழி குறிக்கும்.

(3) சுந்தரன், சுந்தரேசன் ஆகிய பெயர்களையுடைய சிவபெருமானின் துணைவியாதலால் 'சுந்தரி' யானாள்.

(4) அழகு - குணம் - ஆற்றல் - கருணை ஆகிய சௌந்தரியங்களின் கடலாகி "சௌந்தரியலகரி" என்றே வருணிக்கப்படும் அழகுக் கடலாகிய அவளைச் சுந்தரி என்றார்.

உ. அந்தரி

(1) உள்ளே இருப்பவள் என்றும், அந்தரத்தில் இருப்பவள் என்றும், பரவெளியில் இருப்பவள் என்றும் பொருள்படும்.

(2) லலிதாசகஸ்ரநாமம் 'பராகாசா' என்கிறது. அதாவது பரவெளியில் அல்லது ஆகாசத்தின் ரூபமானவள்.

'ஆகாச'மென்பதை மனிதர் - தேவர் - அசுரர் முதலானோரின் அறிவுக்குட்பட்ட ஆகாயமென்றும், பராகாசமென்பது அனைவரின் அறிவுக்கும் அப்பாற்பட்ட ஆகாயமென்றும், பொருள்கொள்ளலாம். அப்ராகாசமாக நிற்பதால் 'அந்தரி' ஆனாள்.

(3) விண்ணில்காணப்படுப் கோள்களை "அந்தரத்தில் நிற்கின்றன" என்கிறோம். ஆனால் அவற்றின் சுழற்சிக்கும் ஈர்ப்புச்சக்தி ஆதாரமாகிறது அம்பிகை தனக்கு ஆதாரமேதுமின்றி நிற்பவள். லலிதாசகஸ்ரநாமம் 'நிராதாரா' என்கின்றது. அவளே அனைத்

துக்கும் ஆதாரம் என்பதுகருத்து. அவ்வாறு ஆதார மொன்றுமில்லாத நிலையில் நிற்பவள் 'அந்தரி' எனப் பட்டாள்.

(4) மீண்டும் லலிதாசகஸ்ரநாமம் அவளை 'தஹரா காசரூபிணி' எனப் போற்றுகிறது. உரையாசிரியர் 'அண்ணா' சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ''எல்லாவற்றுக்கும் மிகவுள்ளே Inner most ஆக இருக்கும் தஹரா காசவடிவினை அறியக்கடவது'' என்ற சாந்தோக்ய உபநிடதக் கருத்தையும். ஸ்ரீமத் அப்பைய தீட்சிதரின் 'ரத்னத்ரய பரீக்ஷை'யிலிருந்து ''மனோவாக்குக்கு அப்பாற்பட்ட அந்நிலையினையே ஞானிகள் சுகமென்றும் பூரணமென்றும் போற்றிப் புகழ்கின்றனர்'' என்ற கருத்தையும் ஒப்புமை காட்டி விளக்குகின்றார். அந்த தஹராகாசமென்னும் Innermost நிலையில் இருப்பவளை 'அந்தரி' என்றார்

(5) அவ்வாகாயம் இதயத்தானத்தில் இருக்கிறதென்பர். அனைத்துயிர்களின் உள்ளே இதயத்தானத்தில் வீற்றிருப்பதால் அந்தரி என்றார்.

(6) அம்பிகையின் ஸ்ரீநகரத்தினைச்சுற்றி எட்டு உலோகக் கோட்டைகள், பதினொரு இரத்தினப் பிரகாரங்கள் ஆறு மஹாபத்மாடவி பிரகாரங்கள் ஆகஇருபத்தைந்து கோட்டைகளுள்ளன. அவற்றுக்கும் உள்ளே சிந்தாமணி கிருகத்தில் ஒன்பது ஆவரணங்களையும் கடந்து 'பிந்துமண்டல'மென்ற உள்நிலையில் எழுந்தருளுவதால் ''அந்தரி'' ஆனாள்.

(7) அணுவினைச் சதகூறிட்ட கோணினுள்ளும் அவளே நுண்ணிய சக்தியாக வீற்றிருப்பதால் 'அந்தரி' என்றார்.

௰. பாதம் என் சென்னியதே.

(1) முப்புரையாகவும், மனோன்மணியாகவும், சுந்தரியாகவும் அந்தரியாகவும் உள்ள அம்பிகையின் திருவடிகளை

எனது தலையில் சூட்டிக்கொண்டுள்ளேன். அல்லது திரு வடியினைத் தலையால் வணங்குகின்றேன்.

(2) அம்பிகை பாதம் ஸ்ரீவித்யா உபாஸகர்களின் சிரசில் இருக்கிறதென்பதும், அம்பிகை பாதம் இருப்ப தால் அவர்கள் சாதாரண மனிதர்களுக்கு வணக்கம் செலுத்துதலை தவிர்க்கவேண்டுமென்பதும் மரபு. அதனா லேயே பட்டர் மற்றவர்களைப்போல் மன்னனைக்கண்டு வணங்கவில்லை என்பதுதோன்ற ''அந்தரி பாதம் என் சென்னியது'' என்றார்.

(3) ''கண்பார்வை நன்றாக இருக்கிறது'' என்றும் ''காது கேளாது'' என்றும் தொகுதி ஒருமையாகக் கூறு கிறோம். அதுபோல் பாதங்கள் என்னாது 'பாதம்' என்றார்.

(4) அர்த்தநாரீசுவரவடிவில் அவள் பாதம் ஒன்றேயா கலின் 'அந்தரிபாதம்' என்றார்.

(5) முச்சுடர்களிலும் பொருந்தும் முப்புரைபாதம் தன் சென்னியிலும் இருப்பதால் தண்மதி வரவு தப்பாது என்ற உறுதிப்பாட்டில் ''அந்தரிபாதம் என் சென்னியதே'' என்றார்.

இப்பாடலின் பாராயணபலன் கனவில் அம்பிகை தரிசனம் கிட்டுதல் ஆகும்.

ஸ்ரீ முருகன் அச்சகம், யாழ்ப்பாணம்,